மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கிய காலத்தில் இவைகளால் இவ்வளவு பாதகம் ஏற்படும் என்ற எண்ணம் அப்போதிருந்த அரசுக்கு இருந்ததாக அல்லது அவர்களுக்கு அப்படித் தெரிவிக்கப் பட்டதாக நான் அறியவில்லை. அந்தக் காலச் சூழ்நிலையில் தொழிற்சாலைகள் வந்தால்போதும் என்ற ஆர்வத்தில் அவற்றைத் தொடங்கியிருப்பார்கள். ஆனால் ஏற்படுகிற விளைவுகளை இனிதான் சமாளித்தாக வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : இப்படிப் பல கிணறுகள் கெட்டு விட்டிருக்கின்றன என்று தெரிந்ததற்குப் பின்னால் கெட்டுவிட்ட நிலங்களுக்கு நஷ்டயீடாக அரசாங்கத்திலிருந்து ஏதாவது உதவி செய்யப்பட்டதா ? அல்லது அந்தத் தொழிற்சாலை முதலாளிகளால் ஏதாவது உதவி செய்யப்பட்டதா ? அதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சரியான பரிகாரம் என்ன என்பதை காணவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். உறுப்பினர் அவர்கள், அதில் அக்கறை உள்ளவர்கள், சரியான பரிகாரம் இன்னதுதான் என்று சொன்னால் அல்லது ஒருவேளை தொழிற்சாலையை மூடுவதுதான் சரியான பரிகாரம் என்று சொன்னால் அதையும் அரசாங்கம் பரிசீலித்துப் பதில் சொல்லும்.

Wages for employees in Coir industry

* 49 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government have revised the wages for the employees of the Coir Industry; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ 491–495-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.